பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர் 20 மார்கழி 3 உறநம் 17 இதழ் 308
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-12-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கு
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## முன்னாள் மகாதேசாதிபதி ஒலிவர் காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் மகாதேசாதிபதி சர் ஒலிவர் குணதிலகா தமது 86-வது வயதில் நேற்றுக் காலமானார்.

மரணச்சடங்கு இன்று பிற்பகல் கனத்தை மயானத்தில் நடைபெறும். இலங்கையின் மகாதேசாதிபதியாகப் பதவி வகித்த முதல் இலங்கையரான சர் ஒலிவர் குணதிலகா சிறிதுகாலம் சுகவீனமுற்றிருந்து நேற்று அதிகாலை காலமானார்.

# "சில இராணுவ சிப்பாய்கள் வசாவிளானில் அட்டூழியம்!"

## ஜனாதிபதிக்கு கோப்பாய் எம்.பி. புகார்
## யாழ். நகரில் கிலியேற்படுத்திய வதந்தி

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் சந்தியில் நேற்று முன்தினம் இரவு சிவில் உடையில் வந்த இராணுவச் சிப்பாய்கள் சிலருக்கும் கடைக்காரர் ஒருவருக்குமிடையில் நடந்த வாக்குவாதத்தின் விளைவாக சிலகடைகள் சேதமடைந்ததுடன், அப்பகுதியிலுள்ளவர்களில் சிலரும் அந்தப் பாதையால் போய்வந்தவர்கள் பலரும் தாக்குதலுக்குள்ளான இரண்டு தையல்காரர்களான இஸ்லாமியர்களும் காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி நேற்றுக்காலை தான் கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டதுடன், அவரும் மற்றும் சிலரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவுக்கும் பொலிஸ் அதிபர் திரு எகொடப்பிட்டியாவுக்கும் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து ஸ்தலத்துக்குச்சென்று விசாரணை நடத்திய அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிபரும், இராணுவ முகாம் தளபதியும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் சேதம் பற்றிய விபரங்களையும் கேட்டறிந்தனர்.

### கோப்பாய் எம். பி. நடவடிக்கை

இச்சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் வசாவிளானுக்குச் சென்ற கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அங்கு நடந்த சம்பவங்களைப் பற்றிக் கேட்டறிந்ததுடன் இதுபற்றி உடனடியாக அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டதுடன் கொழும்பில் யாழ் எம். பி திரு வெ யோகேஸ்வரனுடன் தொடர்புகொண்டு நிலைமையை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எடுத்துக்கூறி நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுக்கொண்டார்.

### சிவாவும் சென்று பார்த்தார்

கூட்டணித்தலைவர் திரு மு சிவசிதம்பரமும் வசாவிளானுக்குச் சென்று பார்த்தார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நேற்றுக்காலை அனுப்பிய அவசரத் தந்தியில் இராணுவச் சிப்பாய்கள் சிலர் வசாவிளான் சந்தியிலுள்ள கடையொன்றில் சிகரட் வாங்கிவிட்டுப் பணம் கொடுக்க மறுத்ததாகவும் பணம் கேட்ட கடையையும் மற்றும் அப்பகுதியிலுள்ள கடைகளையும் பின்னர் சிவில் உடையில் வந்த இராணுவச் சிப்பாய்கள் அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியதுடன் வழிப்பறியும் கொள்ளையும் அடித்துச்சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

### கடை உடைப்பு; பணம் கொள்ளை

வசாவிளான் சந்திக்குப் பலாலிவிமான நிலையத்துக்குமிடையிலுள்ள ஒருமதுபானக் கடையையும் அவர்கள் உடைத்து மதுபானப்போத்தல்கள் சிலவற்றையும் ரொக்கம் ஒருதொகையையும் எடுத்துச் சென்றதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### புகார் மீது விசாரணை

இப்புகார்கள் சம்பந்தமாக பொலிஸ், இராணுவ அதிகாரிகள் விசாரணை செய்துவருகின்றனர்

### நிலைமை திருப்தி

வசாவிளான் சந்தியில் நேற்று முன்தினம் மாலை நடபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து வேறு எதுவும் நடைபெறாத வகையில் நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர், இராணுவத் தளபதி ஆகியோர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

### வதந்தியோ வதந்தி!

ஆனாலும் நேற்று மாலை யாழ்ப்பட்டணத்தில் கிளப்பிவிடப்பட்ட வதந்தியினால் கடைக்காரர்கள் கடையை அடைத்து பூட்டியதுடன் மக்கள் பீதிகொண்டு பல இடங்களிலும் ஓடித் தப்ப முனைந்தனர். படமாளிகைகளில் படம் பார்க்கச் சென்றவர்களும் ஓடித்தப்ப முனைந்ததால் பல படமாளிகைகளிலும் இரண்டாவது காட்சி காண்பிக்கப்படவில்லை. வெளியூர்களுக்குச் செல்லவிருந்த லொறிகளும்கூடச் செல்லாமல் நின்றுவிட்டன.

இந்த வதந்தி பற்றி அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோவும் பொலிஸ் அதிபர் திரு. ஏ கொடப்பிட்டியாவும் அதிர்ச்சியடைந்தது

(6 ம் பக்கம் பார்க்க)

## பூமதியன் காலமானார்?

செய்ரோ, டிச 17

அல்ஜீரிய அதிபர் பூமதியன் கடந்த வியாழக்கிழமை காலமானார் என்று எகிப்திய பத்திரிகையொன்று இன்று அறிவித்துள்ளது

## யாழ்ப்பாணத்தில் காலரா?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சில பேருக்கு வாந்திபேதி (காலரா) நோய் ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது

இதுகுறித்து யாழ். மாவட்ட வைத்திய அத்தியட்சர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்

அண்மையில் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இந்நோய் இங்கு கண்டிருக்கலாம் என்று தெரிவிக்கும் சுகாதார அதிகாரிகள் குடிநீரை எப்பொழுதும் கொதிக்கவைத்து அருந்தும்படி பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (கெ)

# இந்திராவுக்கு சிறைத் தண்டனை?

## பாராளுமன்றம் இன்று தீர்ப்பு

[புதுடில்லி]

திருமதி இந்திராகாந்தி மீது இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கொண்டு வந்த ஒரு தீர்மானத்தின் மீது இந்தியப் பாராளுமன்றம் இன்று தீர்ப்பளிக்கும்.

இந்தியப் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறி பாராளுமன்றத்தையும் அவமதித்த திருமதி இந்திராகாந்தி சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று இந்திய பிரதமர் லோக சபையில் தாக்கல் செய்த தீர்மானம் மீது இன்றுவாக்கெடுப்பு நடைபெறுகிறது.

### 'நாடே எதிர்க்கும்'

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், தேசியரீதியில் எதிர்ப்பு உருவாகுமென்றும் முழுநாடே எதிர்க்குமென்றும் இந்திரா காங்கிரஸ் செயலாளர் எச்சரித்துள்ளார்.

## "இராசதுரையின் குற்றச்சாட்டுக்கு மட்டுநகர் மக்கள்தான் பதில்சொல்ல வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"நானும் திரு அமிர்தலிங்கமும் மட்டக்களப்பிலிருந்தபோது சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடபகுதியில் சேரிக்கப்பட்ட உணவு உடைகளை தவறான முறையில் வடபகுதி இளைஞர்களை விநியோகித்ததாக மட்டக்களப்பு எம் பி திரு செ இராசதுரை எங்களிடம் முறைப்பாடு எதுவுமே செய்யவில்லை, வடபகுதி தமிழ் இளைஞர்கள் தவறாக நடந்துகொள்ளுகிறார்கள் என்றும் நான் நம்பவில்லை, இராசதுரையின் இவ்வகையிலான குற்றச்சாட்டுக்கு மட்டக்களப்பு மக்கள்தான் பதில் சொல்லவேண்டும்"

இவ்வாறு மட்டக்களப்பு முதலாவது எம் பி திரு செ இராசதுரை பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு செய்தி குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம் பியுமான திரு எம் சிவசிதம்பரம் விடுத்த செய்தியில் தெரிவித்தார்

"இன்று கிழக்கிலங்கை மக்களுக்கு உடைகள் தான் அதிகமாகத் தேவைப்படுகிறது. சூறாவளி இடம்பெற்று ஒரு மாதகாலமாக மக்கள் உடுத்திருந்த ஆடைகளுடனேயே இன்னும் இருக்கக் காணப்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களில் 20 000 மக்களே பல்வேறு பொது நிறுவனங்களினால் ஆடைகளைப் பெற்றுள்ளனர். இன்னும் 36,000 மக்களுக்கு உடனடித் தேவையாக உடை தேவைப்படுகிறது" என்றும் இச்செய்தியில் திரு எம் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார் [கெ]

## வெற்றிடம்

பதவி: பாலர் பாடசாலை ஆசிரியை, தராதரம்: பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சிப்பத்திரம், விண்ணப்ப முடிவு திகதி: 1-1-1979, விண்ணப்ப முகவரி: கௌரவ செயலாளர், அரியாலை சனசமூக நிலையம், புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 1096

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு / 14295

வயிரவநாதர் செல்லத்துரை,
மவுண்காமல் றோட்டு, குருநகர், யாழ்ப்பாணம்.

— வழக்காளி

எதிராக

1. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை பெண்
2. பிலோமினா பாதகல்.

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14295-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1979-ம் ஆண்டு (27-2-79) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 7610/-ம் 8-3-74 தொடக்கம் 25-3-75 வரைக்கும் ரூபாய் 4950/க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 455-65.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை "நமச்சிவார் தோட்டமும் இராசாவத்தையும் காசியத் தோட்டப் கொட்டிக்கிளானையும் தலைதீக்கியும்" நிலப்பரப்பு 4 குளி 3 வீடும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு கைஒழுங்கையும் கயித்தாம்பிள்ளை செல்வராசாவுக்குரிய காணியும், தெற்கு பேதுருப்பிள்ளை சவிரிமேற்பிள்ளைக்குரிய காணி இதடங்கலும்.

**இ. கனகரெத்தினம்,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

இராமுப்பிள்ளை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
15-12-78. 1080

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. ஈடு/13118

ரி. எ. இராசையாப்பிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா, கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.

வழக்காளி

எதிராக

1. குழந்தைவேலு செல்லத்துரையும்
2. பெண் அன்னம்மாவும் இருவரும் வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
3. தில்லைநாதர் நாகலிங்கம் சரவணை, ஊர்காவற்றுறை.
4. ஆறுமுகம் திருநாவுக்கரசுவும்
5. பெண் கண்ணம்மாவும்
6. அந்தோனிப்பிள்ளை கிறஸ்தியாம்பிள்ளை
7. மாணிக்கம் தேவயோகராஜாவும் எல்லோரும் ஊர்காவற்றுறை.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 13118-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகள் 1979-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதி புதன்கிழமை (28-2-79) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 3760/-ம் 17-5-72 தொடக்கம் 23-7-74 வரைக்கும் ரூபாய் 3760/க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 596/65 ரூபா இதில் 500/- கழிக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை உப்பன் நெ. பர. 7.1/16 கல்வீடும் கிணறும் மற்றும் செய்பயிர், வான்பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசு குமரவேலு பெண் மகேஸ்வரியின் ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு பின்னால் காணும் அம்பலவாணர் பெண் பார்வதியின் ஆதனம் இதடங்கலும்.

ஷெ இறை உப்பன் நி. பர. 2½ இதில் வடக்குப் பக்கமாக நெ. பர (1) ஒன்று குளி 11 15/16. பதினொன்றே முக்காலில் அரைக்காலே வீசம் எல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் பார்வதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு எங்களில் 2-ம் பேருக்குரிய மேலே சொல்லிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு தில்லையர் நாகலிங்கத்தின் ஆதனம் இதடங்கலும்.

**இ. கனகரெத்தினம்,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

இராமுப்பிள்ளை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,
15-12-78. 1081

## கேள்வி விளம்பரம்

### புலோப்பளைக் கிராமசபை
### பளை

கீழ் குறிக்கப்படும் வேலைகளுக்கு சீல்வைத்து கேள்விகள் என்னால் 1978-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 15-00 ஒவ்வொருவேலைக்கும் கேள்வி வைப்பு பணமாக ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி ரூபா 100/-ம் செலுத்தி 21-12-78 ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்களை சபைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் ஒரு பிரதி எனக்கும் மறுபிரதி பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கும் உறையின் இடப்பக்க மேல்மூலையில் வேலைகளுக்கான கேள்விகள் என எழுதப்பட்டு அனுப்பவேண்டும். மேற்கொண்டும் விபரங்கள் எனது காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைவிபரங்கள்:

1. மல்வில் மாசார் றோட்டு.
2. நீலாம்பிகை வீதி.
3. குணந்தான்பள்ளம்வீதி.
4. தர்மக்கேணி றோட்டு.
5. பேராலை கரந்தாய் றோட்டு.
6. பேராலை மயான வீதி.
7. பேராலை செம்பாட்டு வீதி.
8. சின்னத்தாளையடி றோட்டு.

**விசேட ஆணையாளர்,**
புலோப்பளைக்கிராம சபை பளை.

புலோப்பளைக் கிராமசபை
12- 12- 1978. 1089

### வவுனியா நகரம்

## ஆதனவரி அறிவித்தல்

வவுனியா நகர நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல ஆதனங்களுக்கும் 1978-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி 29-12-78-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் வவுனியா நகர விசேட ஆணையாளர் அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் ஆதனவரிப் பணத்திற்கு 10% வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

1978-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ந் திகதி வரையுள்ள ஆதனவரி நிலுவைகளை உடனடியாகச் செலுத்தி நடுக்கட்டுதல், ஆதனங்களை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வவுனியா நகர வரியிறுப்பாளர்கள் யாவரும் பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

**ந. பாலசுப்பிரமணியம்,**
செயலாளர்,
வவுனியா நகரம், வவுனியா,

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வவுனியா நகரம்,
வவுனியா,.
12-12-1978. 1091

## முத்துஐயன்கட்டு

### ப. நோ. கூ. சங்கம்

### பொது முகாமையாளர்,

### தரம் III

## தேவை

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து தலைவர், முத்துஐயன்கட்டு, ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான் என்ற விலாசத்தில் 5-1-1979 திகதிவரை பதிவுக் கடிதமூலம் ஏற்றுக்கொள்ளப்படும். தகைமையும், சம்பள நியதியும் 12-5-1972 வெளியான 15009/12A இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியின் 8-ம் அத்தியாயம் இணைப்பு 5ஐ பார்க்கவும்.

**தலைவர்,**

முத்துஐயன்கட்டு
ப. நோ. கூ. சங்கம்,
1058 ஒட்டுசுட்டான்.

### சாவகச்சேரி நகரசபை

## கேள்விப் பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கு இந்நகரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. நுணாவில் கல்வயல் வீதி 1-ம் ஒழுங்கைக்கு கிரவலிடுதல்.
2. மகளிர் கல்லூரி ஒழுங்கைக்கு கிரவலிடுதல்.

கேள்விப் பத்திரங்கள் 26-12-78-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப்பணமாகவும் கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் காகித உறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு டிசம்பர் மாதம் 28-ந் திகதி முற்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபையின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்படவேண்டும்.

இதைப் பற்றிய விதிகளும் விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**த. நவரத்தினராசா,**
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
10-12-78. 1090

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## காரைநகர் இந்துக் கல்லூரி
## பிரவேசப் பரீட்சை - 1979

மேற்படி கல்லூரியில் 6, 7, 8, 9ஆம் வகுப்புகளில் அனுமதி பெற விரும்பும் மாணவர்களுக்கு 23-12-78-ம் திகதி காலை ஒன்பது மணிக்கு பரீட்சை ஒன்று நடைபெறும்.

அதிபர்

1100

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தளபாடங்கள் கருவிகள் ஆகியன முழுமையாக விற்பனைக்கிருக்கின்றன. தொடர்பு:- 246, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1094

சண்டிலிப்பாயில் D. R. O. அலுவலகம், பிரதான வீதிக்கு அண்மையில் இரு காணிகள் 14 பரப்பும், 17 பரப்பும் முழுவதாகவோ அல்லது துண்டுகளாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், 60, கோவில் பிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, (நாச்சிமார் கோவில்) யாழ்ப்பாணம். 1098

75 பரப்பு தென்னந் தோட்டமும் வீடும், 75 பரப்பு வயல் காணியும் கிழக்கு அரியாலையில் உண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு கடித மூலம் தொடர்புகொள்ளவும், செ. நித்தியானந்தம், மூன்னாலை, இளவாலை. 1092

### தவறிவிட்டது

அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் உதவி மேற்பார்வையாளர் திரு கே. எச். ஏ. பேமதாஸா அவர்களின் அடையாள அட்டை (C/23/78) கடந்த 9-12-78 நண்பகல் 12-30க்கு நெல்லியடியில் இருந்து நல்லூர் வருகையில் பருத்தித்துறை டிப்போ பஸ்ஸில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்க. ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். 1095

## அறிவித்தல்

நொச்சியம்பதிப்பிள்ளையார் கோயில் திருப்பணி நிதிக்காக 20-12-78ல் இழுக்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டு 1979 தமிழ் வருடப் பிறப்புத் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது.

**ஆ. க. தியாகராசா,**
கோயில் செயலாளன்.
1099

## தமிழர் கூட்டணி கிளையின் நிவாரணவேலை

(நெல்லியடி)

கிழக்கு மாகாணத்தில் சூறாவளியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றை பருத்தித்துறை தமிழர் விடுதலைக்கூட்டணி கிளை புனரமைக்கவுள்ளது. அக்கிராமம் எதுவென்று இதுவரை முடிவு செய்யப்படவில்லை. விரைவில் புனரமைக்கவுள்ள கிராமம் தெரிவு செய்யப்படும்.

மேற்கண்ட தகவலை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமே தெரிவித்துள்ளார்.

தொண்டையில் ஏற்பட்ட நோய்காரணமாக பேசமுடியாமல் பாராளுமன்ற வரவு செலவுத் திட்டப்பேச்சுக்களிலும் கலந்து கொள்ளாத இவர் தற்பொழுது மெதுவாக பேச ஆரம்பித்துள்ளார்.

**கிழக்கில் வீசிய சூறுவளியில் தாம்பெற்ற அனுபவத்தை ஆசிரியை ஒருவர் இங்கு தருகிறார்—**

# கிழக்கின்கண்ணீர்க்கதைதொடர்கதையாகாமல் பிரார்த்தனை செய்வோம்

"மட்டக்களப்பில் மீண்டும் காற்று! மழை!! வெள்ளம்!!!" — என்ற வானொலி, பத்திரிகைச் செய்திகளைக் கேட்கும் போதெல்லாம் நான் யாழ்ப்பாணத்திலே இருக்கிறேன் என்பதையும் மறந்து, என்னை அறியாமலேயே ஒரு மேசையின் கீழ் ஒளிந்துகொள்ள வேண்டுமென்ற அவசர எண்ணம் ஒன்று என்னை உந்தித் தள்ளுகிறது. சூறுவளிக்குப் பின், சிறு காற்று வீசினாலும் மட்டக்களப்பில் பயங்கரச் சூறுவளியின் சூரத்தனத்திற்குள்ளாகிச் சிக்கித் தவித்த என்னைப் போன்ற அத்தனை பேரும் இந்த நிலைக்கே தள்ளப்படுவார்கள் அந்த அனுபவம் அத்தனை பயங்கரமானது! கொடுமையானது!! அந்த அனுபவத்தை எழுதச் சொல்லிக் கேட்கிறார், பத்திரிகையாளரான ஒரு சகோதரர்.

## இறைவனைப் பிரார்த்திப்போம்

ஒரு பிரதேசத்தையே சூறையாடிவிட்ட இதை, எழுதியோ, சொல்லியோ முடியாது. என்றாலும் இத்தகைய ஓர் இயற்கையின் சீற்றத்திற்கு இலங்கையில் மட்டுமல்ல, உலகின் எந்த மூலையில் இருக்கும் ஜீவராசியும் உள்ளாகக்கூடாதென நாம் எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் என்பதற்காக இதை எழுதுகிறேன். இத்தகைய ஓர் அனுபவம் எவருக்குமே ஏற்படக்கூடாது; ஏற்பட இறைவன் இனிமேல் அனுமதிக்கவும் கூடாது.

சூறுவளித் 'திருநாளான' நவம்பர் 23ந் தேதி, வியாழக்கிழமை எங்கள் பாடசாலை பிற்பகல் 1-30க்கு முடிந்ததும், நானும், இன்னும் இரு ஆசிரியைகளும், இவர்களில் ஒருவரின் சகோதரியின் குழந்தையாகிய நான்கு வயதுச் சிறுவனும் ஒரு நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்காகச் செட்டிபாளையம் மகாவித்தியாலயத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள தேத்தாத்தீவு புனித யூதாதேயு தேவாலயத்திற்குச் சென்றோம். இக் கத்தோலிக்க தேவாலயம் இலங்கை பூராவும் பிரசித்தி பெற்றது. வைத்திய நிபுணர்கள் பலர் கைவிட்ட 'கேஸ்'களை எல்லாம் சுகப்படுத்திய பெருமை இதற்குண்டு. இலங்கையில் பல பகுதிகளில் இருந்தும் சகல இன, மதத்தவர்களும் இத்தேவாலயத்தை நாடிவந்து, தம்மைப் பிடித்த தீய ஆவிகளை நீக்கி; நோய் நொடிகளைக் குணமாக்குவர். இத்தகைய பெருமை தாங்கிய இவ்வாலயத்தை நாங்கள் அடையும்போது பிற்பகல் சுமார் மூன்று மணி.

## சூறுவளி முன்னறிவிப்பு

தேவாலயத்திலேயே மெழுகுவர்த்திகள் சிலவற்றை வாங்கி, புனித யூதாதேயு முன்னால் வைத்துக் கொளுத்துகிறோம். அந்த நேரத்திலேயே சூறுவளி தன் வருகையை எங்களுக்கு அறிவிக்க ஆரம்பித்துவிட்டது. மெழுகுவர்த்திகள் காற்றோடு போராடமுடியவில்லை, அவை அணைந்தன. கடும் தூற்றலும் தொடங்கியது. ஒருவாறு எங்கள் வணக்கத்தை முடித்துக்கொண்டு இவ்வாலய வீதியில் இருக்கும் எங்கள் பாடசாலை ஆசிரியை ஒருவரின் அறைக்குச் சென்றோம். அங்கு சில பெண் நோயாளிகளும், சில பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்களோடு அளவளாவிக்கொண்டிருக்கும்பொழுதே வருணபகவானின் சீற்றம் வெளிப்படத் தொடங்கியது. இந்தவேளையில் கல்முனை செல்லப் புறப்பட்ட தேவாலயக் குருவானவர், புதிதாக எங்களைக் கண்டதும் எங்களை நோக்கி வந்தார். தேவாலய விடுதியிலுள்ள எங்கள் சக ஆசிரியை எம்மை அவருக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். அவர் ஒரு பறங்கியர். அழகாகத் தமிழ் பேசுகிறார். தான் செபத்தின் மூலம் கெட்ட ஆவிகளை அவற்றுடன் பேசி எவ்வாறு விரட்டுகின்றார் என்பதை கூறினார். இதுபற்றிய உண்மையைவிளங்காத சிலர் தூற்றவும் செய்கிறார்கள்; விளங்கிய பலர் போற்றவும் செய்கிறார்கள் என்று கூறிய அவர், எது எப்படியானாலும் தன்னிடம் வந்து ஆண்டவன் அருளால் சுகமான பல நோயாளிகளைக் காணும்போது தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறிக்கொண்டு அங்கிருந்த இரு பெண்களுக்குச் செபம்பண்ணி, அவர்களைப் பீடித்துள்ள கெட்ட ஆவிகளைப் பேசவைத்தார். பேய், பிசாசு ஆகியவற்றில் அதிக அளவு நம்பிக்கையில்லாத எனக்கு, அவரின் நடவடிக்கைகளும், அவர் கூறும் சில உண்மைகளை அப்பெண்களிடத்திலே கண்டபோதும் ஆச்சரியமும், சிறிது பீதியும் உண்டாயின.

(இங்கு தமது சூறுவளி அனுபவத்தை விளக்கும் செல்வி குணமணி கதிரவேலு முன்னர் பத்திரிகையாளராயிருந்து 'ஈழநாடு' வாசகர்களுக்கு மிகவும் பரிச்சயமானவர். இப்போது இவர் ஓர் பள்ளிஆசிரியை. தமது பாடசாலை மாணவியர் இருவர்கூட இரக்கமற்ற கோரப்புயலின் பலியானதாகக் கூறும் இவ்வாசிரியையின் மனம் எவ்வாறிருக்கும்?...)

## பேய் விரட்டுகையில் புயலும் வந்தது

இவ்வாறு பேய் விரட்டுவதை அவதானித்துக் கொண்டிருந்த எங்களுக்குத் திடீரென்று வாயு பகவான் வருணபகவானை மிகச் சீற்றத்தோடு விரட்டியடித்துக்கொண்டு வந்தது பயத்தை விளைவித்தது. உடனே "சுவாமி நன்றி. நாங்கள் புறப்படுகிறோம்" என்றோம். ஆனால் அவர் "நீங்கள் இந்தக் காற்று மழையில் போகவேகூடாது. இன்னும் சிறிது நேரத்தில் காற்று மிகப் பலமாக வீசப் போகிறது ஆதலால் பொறுங்கள்" என்றார் அக்குருவானவரின் கட்டளையை எங்களால் மீறமுடியவில்லை.

## கிடுகிடுவென்று நடுங்கினோம்

அப்பொழுது நேரம் மாலை 5 மணி காற்றின் வேகம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து, சுழன்று சுழன்று வீசுகிறது. மிகப் பரந்த அந்த ஆலய வளவின் ஆயிரக்கணக்கான மாங்களும் பேய் பிடித்தாடுவதுபோல சுழல்கின்றன. நேரமும் விஷம் போல ஏறுகிறது நேரத்துடன் போட்டி போட ஆரம்பிக்கிறது, சூறுவளி நாங்கள் மூவரும், குட்டிப்பயலும் எங்கள் எங்கள் இருப்பிடம் செல்லமுடியாததை உணர்ந்ததும் பயம் எங்களைப் பற்றிக்கொண்டது. மிக அருகிலுள்ள வங்காள விரிகுடாவும் கொந்தளித்து அவலமாகக் குமுறுகிறது. அந்த ஓசை — அது எங்கள் காலடிக்கே வந்துவிட்டது போன்ற உணர்வு. கடலின் பயங்கர ஓசையும், சூறுவளியின் வேக அதிகரிப்பும், இடி மின்னலோடு கூடிய மழையின் உக்கிரமும் எம்மைக் கிடுகிடுக்கவைக்கின்றன. எங்களை மட்டுமா, நாங்கள் நின்ற கட்டிடமும் கிடுகிடுக்கிறது. உடனே குருவானவர் எங்கள் எல்லோரையும் ஆபத்தான மண்டபத்தை விடுத்து அந்த விடுதியின் ஒதுங்கிய சமையலறைக்குள் சென்று ஒளிந்து கொள்ளுமாறு கூறுகிறார். பயத்தால் 10 அல்லது 11 பேரின் வாய்களும் பேச மறுக்கின்றன. கால்கள் குருவானவரின் கட்டளைக்குப் பணிகின்றன. ஆலயத்தின் ஏனைய சிறு சிறு விடுதிகளில் உள்ள நோயாளிகள், கன்னியாஸ்திரிகள், ஊழியர்களின் நிலையை நினைத்துக் குருவானவர் கலங்குகின்றார். கலங்கி என்ன பயன்? ஒன்றுமே செய்ய இயலாது. பேய்க் காற்று! பயங்கரமழை!! கும்மிருட்டு!!! செவிப்பறையைச் செயலிழக்கச் செய்யும், யாரும் தம் வாழ்நாளிலே கேட்டறியாத கோர ஓசை!!!! இத்தனைக்கும் மத்தியில் எவருமே இம்மியத்தனையும் அசையமுடியாது

## சமையலறைக்குள் பிரார்த்தனை

இந்தவேளையில் சமையலறைக்குள் குருவானவரின் தலைமையில் மன்னுயிர்களுக்காகப் பாடுபடவந்த அந்த இறைவனை நோக்கிச் செபம் நடைபெறுகிறது நாங்கள் மூவரும் சைவர்கள், எங்கள் எங்கள் இஷ்டதெய்வங்களை மனதுக்குள் வேண்டிக்கொள்கிறோம். இந்த வேண்டுதல்கள் யாவற்றையும் இறைவனின் காதுகளுக்கு எட்டவிடாது சூறுவளி விநாடிக்கு விநாடி தன் சூரத்தனத்தை அதிகரித்தது

## குளியல் அறையில் தஞ்சம்

## அதுவும் 10 நிமிடம்

சமையலறையின் ஷீட்டுகளுடன் சூறுவளி விளையாடுகிறது. ஷீட்டுகள் பயங்கர ஓசையுடன் பறக்கின்றன. அந்த இடைவெளிக்கூடாக மின்னலும் இடியும் பேய்க்காற்றும் எங்களைப் பயமுறுத்தவே, குருவானவரின் கட்டளைப்படி குளியலறைக்குள் எல்லோரும் ஓடித் தஞ்சம் புகுந்தோம் ஒருசில நிமிடங்கள் தான் குளியலறையும் எங்களுக்கு அடைக்கலம் தர முடிந்தது. அதன் பின் அதன் கூரையும் பறிபோகவே, பக்கத்திலுள்ள ஒதுங்கிய-பழையதுபோடும் அறைக்குள், நுழைய முடியாது மிகச் சிரமப்பட்டு நுழைந்துகொள்கின்றோம்.

## தலைகளில் விழாமல் விழுந்த 'காங்கிரீட்' கல்லுகள்

சூறுவளி அந்த மூலையையெப்படித்தான் கண்டுபிடித்ததோ? பத்து நிமிடங்கள்கூட இருக்காது. அதன் ஷீட்டுக்களையும் பறித்துவிட்டது. இனி என்ன செய்வது என்று நினைக்கும் போதே தம் ஆதாரமாகிய ஷீட்டுகளை இழந்த 'காங்கிரீட்'கட்டிகள் இருப்புத்துண்டுகள் காலடியில் வீழ்கின்றன. எங்கள் தலைகளின்விதி கொஞ்சம் வலிமைபோலும். இக்கற்களிலிருந்து அவை எப்படியோ தப்பிக்கொண்டன.

## மரக்கிளைகளும் மழைநீரும் அபிஷேகம்

வானம் கூரையாகவே மரக்கிளைகளும் மழைநீரும் எங்கள் மேல் அபிஷேகிக்கப்படுகின்றன.

## செல்வி க. குணமணி

அருகில் இருந்த பெரிய கன்ரீன் கட்டிடக்கூரை முற்றாகப் பறந்துகொண்டிருப்பதைக் கண்டோம். கன்னியாஸ்திரிகளின் கட்டிடமும் ஆட்டங்கண்டு அவர்களும் எங்களைப்போல விடுதிக்கூரையை இழந்துபறக்காத வானக்கூரையின்கீழேயே இருந்து வருண, வாயுபகவான்களின் சவுக்கடிகளைப்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டோம். நோயாளிகள் இருந்த விடுதிகளையாவதுபாவம் என்று விட்டுவைத்ததா இந்தச் சூறுவளி அதையும் பறித்து பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக்கித் தன் கோரக்கரங்களால் அவர்கள் நோயுடலைச் சாகடித்துக்கொண்டிருந்தது. இவையெல்லாவற்றையும் தேவாலய அலுவலர் பப்பா என்பவர்மூலம் நாம் அறிந்துகொண்டோம். உடனே எங்களோடுநின்ற குருவானவர் அநாதரவான இத்தனை ஜீவன்களையும் ஓரிடத்திலே பாதுகாப்பாகக்கொண்டுவரவேண்டுமெனப் புறப்பட்டார் ஆனால் கோரப்புயலுக்குள்வெளியேற வெளியேற அவரை எவரும் அனுமதிக்கவில்லை.

## 'இன்ரவலில்' குருவானவரும் நாமும்

இந்தவேளையில் இரவுசுமார் எட்டரை அல்லது ஒன்பது மணியிருக்கும் சூறுவளிச்சூரன் 'இன்ரவல்' விட நினைத்தானோ என்னவோ, புயலின்வேகம் சிறிதளவு தணிந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குருவானவர் இறைவன்சந்நிதியில் எல்லோரையும் ஒன்றுசேர்க்கமுடிவுசெய்தார், நாங்கள் நின்ற கட்டிடத்தில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. குருவானவர் தீர்க்கமான ஒரு முடிவுடன் தன்பின்னால் விரைவாக வெளியில் எங்களை ஓடிவரச் சொல்கிறார் ஒரே கும்மிருட்டு! காற்று!! மழை!!! இவற்றின் மத்தியில் ஒரு டோர்ச் விளக்கின் வெளிச்சத்தில் அவரைப் பின்தொடர்ந்து ஓடுகிறோம். ஓடுகிறோமா எல்லோர் உடம்பும் தென்னாலிராமன் குதிரை போல வேலை செய்கிறது ஓரடி முன்வைத்தால் காற்று நாலடி பின்னால் தள்ளிவிடுகிறது புயலுக்குள் நிமிர்ந்து நடக்கக்கூடாது என்பார்கள் நாங்கள் குனிந்து கூனி உயிரைக்கையிலே பிடித்துக்கொண்டு குளறிக்கொண்டு ஓடுகிறோம் [illegible] கிடக்கும் மரங்களையெல்லாம் தாண்டி ஓடுவதென்பது சுலபமா? ஒருநிமிடத்துக்குள் குருவானவர் பின்வாசலிலோடினார். காரணம் ஆலய மண்டபம் தரைமட்டமாகிக் கிடந்தது மங்கலாகத் தெரிந்தது எங்களுக்கே நம்பிக்கை சிறிதளவும் இல்லை. ஆனால் ஆண்டவன் அருள்பெற்ற அவரோ எனக்குப்பின்னால் வாருங்கள் பின்னாலே என்றுகூறிக்கொண்டே ஓடுகிறார். அவர்பின்னால் ஓடி பூஜைஅறையை அடைகிறோம். அங்கு நாங்கள் கண்ட காட்சி கலங்கவைத்தது. எங்களுக்குச் சற்று முன்னர் ஓடித் தஞ்சம் புகுந்த நோயாளிகள் முப்பதுக்கு மேற்பட்டோர் நடுங்கிக்கொண்டு அழுதுகொண்டிருந்தனர் இறைவனின் இருப்பிடமான இந்த அறைக்குள் நோயாளிகள், வீடிழந்த சில ஏழைகள், பிரார்த்தனைக்காக வந்த நாங்கள் நால்வர், சில மேல்நாட்டுக் கன்னியாஸ்திரிகள் உட்படக் கன்னியாஸ்திரிகள் சிலர் ஆலயக் குருவானவர் சேவகர்கள் இப்படி 60க்கு மேற்பட்டோர் அடைந்து கிடந்தோம்.


## இடைவேளையின்பின் மீண்டும் உக்கிரம்

அப்பொழுது நேரம் ஒன்பதுக்குச் சிலநிமிடங்கள் அதிகமாகவிருக்கும். சிறிது தணிந்திருந்த புயல் இந்த இடைவேளைக்குப்பின் மிகவும் உக்கிரம் பெற்றது, ஏற்கனவேவீசியதைவிட பன்மடங்கு வேகத்தில் முந்திய திசையிலிருந்து திசைமாறி வீசத்தொடங்கியது இந்தக்காற்றின் தாக்கத்தை என்னவென்று கூறவே முடியாது. கண்ணாடி யன்னல்களை உடைத்தெறிந்து சிலவற்றைப் பிடுங்கிவீசியது. நாங்கள் இருந்த அறையின் மேல் மாடி நொறுங்குவது பயங்கரமாகக் கேட்டது நாங்கள் நின்ற அறைமுழுவதும் ஒரே இலையும் குழையும் நீருமாக வாரி இறைத்து வெள்ளக்காடாக்கியது திருச்சொரூபப் படங்கள் யாவும் பரிதாபமாக எங்கள் காலடியில் வீழ்ந்து நொறுங்கின,

## சிலுவையைச் சீண்டாத புதுமை

எல்லாச் சொரூபங்களும் போயச் சிலுவையில் அறைபட்ட ஆண்டவரின் சொரூபம் மாத்திரம்- ஒரு ஒன்றரை அடி உயரச்சிலுவை- அசைந்துகொண்டு புயலைப் பொருட்படுத்தாது இருந்த இடத்திலேயே இருந்தது. குருவானவரோ கன்னியாஸ்திரிகளோ மற்றும் எவருமோ அதை அகற்ற அனுமதிக்கவில்லை. அந்த ஆண்டவர் எல்லோரையும் காப்பார் என்ற நம்பிக்கையோடு அதையேபார்த்த வண்ணம் செபம் சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்ன ஆச்சரியம்! அந்த ஆலயத்தில்

(4ம் பக்கம் பார்க்க)



# தாய்வான்பிரதமர்ராஜினுமா; பொதுத் தேர்தல் ஒத்திவைப்பு

## சீன - அமெரிக்க ராஜீயஉறவுக்கு எதிர்ப்பு

(வாஷிங்டன்)

நவசீனவுடன் அடுத்த வருடம் முதல் ராஜீய உறவை வைத்துக்கொள்வதென்று அமெரிக்காவும் சீனவும் செய்துள்ள முடிவுக்கு இந்தியா, ஜப்பான், வியட்நாம் மற்றும் பல நாடுகளும் வரவேற்பும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளன.

இதேசமயம் தாய்வான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் தமது பதவிகளை ராஜினமாச் செய்துள்ளனர்.

தாய்வானில் அடுத்த மாதம் நடைபெறவிருந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் தாய்வான் அரசு ஒத்திவைத்துள்ளது.

நவசீன-அமெரிக்க ராஜீய உறவுபற்றி சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் கருத்து எதுவும் தெரிவிக்காமல் செய்தியைமட்டும் வெளியிட்டிருந்தது.

## மதுரை சோமுவுக்கு பரிசு

(புதுடில்லி)

மதுரை சோமுவுக்கும் லால்குடி ஜயராமனுக்கும் சங்கீத நாட்டிய அக்கடமி இவ்வாண்டு பரிசு வழங்கியிருக்கிறது.

சந்தியாவந்தனம் சீனிவாச அய்யருக்கும் இப்பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

சங்கீதம், நாட்டியம் மற்றும் இசைத்துறையில் சிறந்து விளங்கும் பதினைன்கு பேர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

## சென்னை-கொழும்பு விமானச் சேவை

சென்னை, டிச. 16

சென்னையிலிருந்து கொழும்புக்கு ஞாயிறு தோறும் மேலும் விமானச் சேவை ஒன்றை நடத்த இந்தியன் ஏயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளது.

இப்போது சேவையாற்றும் சென்னை-கொழும்பு, சென்னை-திருச்சி-கொழும்பு விமானச் சேவைகளுடன் புதிய சேவை ஞாயிறு தோறும் மேற்கொள்ளப்படும்:

புதிய சேவை மாலை 3 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு 4-10-க்கு கொழும்பைச் சென்றடையும். கொழும்பிலிருந்து மீண்டும் மாலை 4-50 க்கு புறப்படும் விமானம் 6 மணிக்கு சென்னையை வந்தடையும். (இ)

# கிழக்கின், கண்ணீர்க்கதை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றையும் அபகரித்த சூருவளியினல் கடைசிவரை அச்சிலுவையைத்தீண்டமுடியவில்லை. இந்த இடத்தில்தான் நாம் இறைசக்தியை நன்குணர முடிகிறது.

கோவிலுக்குள் இருக்கும் யன்னல்கள், படங்கள் யாவும் நொறுங்கி முடிகையில் நள்ளிரவு 12 மணி இருக்கும்.

### எமது சடலங்கள் பற்றி கவலைப்பட்டோம்

தொடர்ந்து மிக உக்கிரமாகப் புயல் வீசுகிறது உடல் பூழுவதும் ஒரே மண். அத்துடன் மழையில் உடல்முழுக்கத் தெப்பமாக நனைந்து கொண்டிருக்கிறது கீழே வெள்ளம். இருப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒரேநிலை தான். இந்தநேரத்தில் எவருக்கும் பேச்செழவில்லை. காது செவிடாகிவிட்டது போன்ற உணர்வு. நாங்கள் இறப்பது என்பது தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இனிச்சடலங்களைப் பற்றிய கவலை தொட்டது பாடசாலையிலுமில்லை. வாடகைக்கு இருக்கும் வீட்டிலுமில்லை முன்பின் தெரியாத இடத்திலிருந்து சடலத்தை யார் எப்பிறந்த மண்ணன யாழ்ப்பாணம் அனுப்புவார்கள்- இப்படி எண்ணிக்கொண்டு என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு நின்ற எங்கள் பாடசாலை விஞ்ஞான ஆசிரியை செல்வி நிமலா தம்பிராசாவிடம் இதைக்கேட்டுவிடுகிறேன். ஒருவேளை விலாசம் தெரிந்த அவர் தப்பினல் என் உடலை யாழ்ப்பாணம அனுப்பலாமல்லவா?'' எல்லோருமே தொலையப்போகிறோம். யார் யாரை அனுப்புவது. பேசாமல் இரு'' என்றார் அவர் இதன் பின்னர்பேச சூருவளி விட்டால்தானே எல்லோரது உடல்களும் நடனம் பழகத் தொடங்கிவிட்டன. வாய்கள், தாளம் தவருத சல்லாரியைப்போல் கடகடவென்று தானகவே அடிக்கத் தொடங்கிவிட்டன. பிற்பகல் 3 மணியிலிருந்து தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்ததால் கால்கள் ஆடத் தொடங்கிவிட்டன ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்ட கைகளை சூருவளி அடிக்கடி பறித்துப் பறித்து விலவித்துக் கொண்டிருந்தது நோயாளிகளில் சிலர் 'தொட-தொட' என்று விழுந்துகொண்டிருந்தனர். சேவைச் சின்னமான கன்னியாஸ்திரிகள் நடுங்கி நடுங்கி அவர்களுக்குச் சிகிச்சை அளித்தனர்.

இந்த வேளையில் என்னுடன் இருந்த சக ஆசிரியைகளான விமலாவும் நிமலாவும் தங்கள் தங்கள் வீடுகளின் நிலை என்னவோ எனக் குமுறி அழத்தொடங்கிவிட்டார்கள யாழ்ப்பாணத்தில் சூருவளி இல்லை என்பது எனக்குத் தெரியுமாதலால் வீட்டின நிலை கவலை தரவில்லை தேத்தாதீவில் மட்டும் தான் இச்சூருவளிக்கொடுமை என எண்ணி இதற்குப் பலியாகி அநாதரவாக அத்தேவாலய வளவில் அடக்கமாகப்போகிறேன் என முடிவுகட்டிக்கொண்டு ''உங்கள் வீடுகளில் ஒன்றும் நடவாது இது இங்கு தேத்தாத்தீவில் தான் கடல் பக்கத்தில் இருப்பதால் கடுமையாக இருக்கிறது, கவலைப்படாதீர்கள் இதில இருந்து தப்பித்துக்கொண்டால் விடிய உங்கள வீடுகளுக்குப் போய்ச்சேர்ந்துவிடலாம்'' என அவர்களுக்கு ஆறுதல் கூறினேன் இதைச் சம்பிரதாயமாகக் கூறினேனே ஒழிய ஒருவராவது பிழைப்போம்என்றநம்பிக்கைஎள்ளளவாவது மனதில் கிடையாது. அந்தளவுக்கு பேய்ச் சூருவளி இறுதிப் பயணத்துக்கு எங்களைத் தயாராக்கிக் கொண்டிருந்தது. நாங்கள் நின்ற பிரமாண்டமான முழுச் சீமெந்துக் கட்டிடத்திலும் வெடிப்புக் காணவே இடையிடையே சுவாமியார் கூறிய ஆறுதல் வார்த்தைகளும் அந்தநேரத்தில் அர்த்தமற்றவையாகின.

புதுமையான இச் சூருவளியில் வெப்பமும் இருந்தது; குளிரும் இருந்தது. மழையோடு வீசும்போது குளிர் உடலை உலுக்கியது அதே வேளை தனித்து வீசும்போது உடல்முழுவதும்வெயில்பட்டுக் காய்ந்ததுபோல் ஆகிவிட்டது. ஒவ்வொரு வீச்சும் உடலில்படும்பொழுது சவுக்கடி. இப்படித்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டேன்.

எல்லார்வாயிலும் ''ஐயோ! ஐயோ!!'' என்ற சத்தமே தவிரவேறொன்றுமில்லை. காற்றின் ஒவ்வொரு அடியும் உடலில் படும்போது இனி இந்த உடல் உலகில் தப்பிப் பிழைப்பது அரிது என்ற முடிவு செய்துவிட்டோம். இம்முடிவை எல்லோரும் உள்ளுக்குள் ஏகோபித்து எடுத்துவிட்டாலும். ஆறுதல் கூறுதல் என்ற சம்பிரதாயம் நடுங்கும் உதடுகளில் இருந்து அடிக்கடி வரத்தான் செய்தது.

### நம்பிக்கை ஒளிக்கீற்று

விடியற்காலை இரண்டு மணியிருக்கும் எல்லோர் முகத்திலும் நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தெரிய ஆரம்பித்தது. காரணம் சூருவளியின் உக்கிரம் சற்றுக் குறைந்தது வெள்ளி அதிகாலை 3 மணிக்கு வெளியில் மனிதன் தலைகாட்டக் கூடிய அளவுக்கு அதன் வேகம் சற்றே குறைந்திருந்தது.

இந்த நேரதில் என்னேடு வந்த ஆசிரியைகளில் ஒருவரான விமலாவின்மைத்துனர் உறவினர் ஒருவரோடு எங்களைத்தேடி வந்துசேர்ந்தார். சுமார் 2 மணித்தியாலங்கள் நின்ற நிலையில் சூருவளியோடு உயிருக்காகக் கடும போராட்டம் நடத்தி என்ன செய்வதென்றறியாது, திகைப்பிரமை பிடித்திருந்த எங்களுக்கு இவர்களைக் கண்டதும் தான் நாங்கள் உயிரோடு நிற்பது உண்மைதான்; இனி எங்கள் இருப்பிடம் சேரவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆலயத்தில்உள்ளவர்களிடம விடைபெற்றுக்கொண்டு கடும் தூற்றலையும் காற்றையும் பொருட்படுத்தாது வெளியேகிளம்பினேம்.

### மறுபிறப்புப் போலிருந்தது

மறுபிறப்பொன்று எடுத்து வெளியில் வந்ததுபோலிருந்தது எங்களுக்கு திக்குத்திசை ஒன்றுமே தெரியவில்லை வந்தவர்கள் கையில் இருந்த டோர்ச் வெளிச்சத்தின் பின் செல்கிறோம். ஆலய வளவுக்குள் நிற்கும்மரங்கள் ஒன்றுமே இல்லை. யாவும் பிடுங்கிச்சின்னபின்னமாக வீசப்பட்டிருந்தன மரங்களின்மேல் ஏறி அவற்றை ஒவ்வொன்ருகக் கஷ்டப்பட்டுக் கடந்துகொண்டேமுன்னேறி வீதிக்கு வந்தோம்.

### அழுகுரல்கள் கேட்கின்றன

வீதியேதெரியவில்லை; எல்லா இடங்களிலும் ஒரே மரங்கள். இவற்றினூடாகப் புகுந்து புகுந்து வரும்போது தேத்தாதீவுப் பற்றைகளுக்குள்இருந்து குடிசைகளை இழந்த மக்களின் அழுகுரல்கள் கேட்கின்றன. உதவிக்காகக் குழந்தைகளும் பெண்களும் அலறிக்கொண்டே இருந்தார்கள். இடையில் ஒரு பஸ் வண்டி நிறையப் பிரயாணிகளுடன் நின்றிருந்தது. பின்னலும் செல்ல முடியாது. முன்னலும் செல்ல முடியாதவாறு இரு இராட்சத மரங்கள் அதற்குத் தடை விதித்திருந்தன அம்பாறைக்குப் பயணமாகும் அந்த பஸ் தேத்தாத் தீவிலேயே சூருவளிக் கொடுமையை அனுபவித்துக்கொண்டிருந்தது. அதற்குள் இருந்தவர்களில் அநேகர் டிக்கட் இல்லாத பிரயாணிகள். அதாவது தங்கள் குடிசைகள் பறந்ததும் இவர்கள் இதற்குள் தஞ்சம் புகுந்துகொண்டார்கள் பல மணிநேரம் அந்தப் பஸ்ஸுக்குள் அடைந்து விறைத்திருந்த இவர்களைச் சிலர் கஷ்டப்பட்டு இழுத்து வெளியில் எடுப்பதை நேரடியாகக் கண்டபோது உடலில் உயிர் இருக்கிறதோ இல்லையோ என ஐயப்பட வேண்டியிருந்தது.

### மனிதனின் கெட்டித்தனம்!

தென்னஞ்சோலைகள், கல் வீடுகள், பாடசாலைகள், அழகிய பெரிய மரங்கள் யாவற்றையும் சூருவளிக்குத் தானம் பண்ணித் தவிக்கும் தேத்தாத்தீவுக் கிராமத்தைக் கடந்து மாங்காட்டுக் கிராமத்தை அடைந்தபோது தரைமட்டமான பாடசாலை வரவேற்றது. மரங்கள் யாவும் தலைகீழாக நின்றன. ஒரு வீடு தானும் இல்லை என்று சொல்லுமளவுக்குப் பெரும் அழிவு. இங்கும் எங்கும் மரண ஒலியே கேட்டது. விடியற்காலை ஆனலும் இந்த ஒலிகள் யாவும் மனதில் பீதியையும் கலக்கத்தையுமே அதிகரித்தது. இதற்குள்ளும் மனிதனின் ஒரு சிறு கெட்டித்தனம் பாருங்களேன் மாங்காட்டுக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தின் முன் பொலிஸ்காரர் ஒருவர் நின்றார். என்ன என்று நினைக்கிறீர்கள் கடும் புயலுக்குள்ளும் கொள்ளையர் ஏழைகளின் பங்கீட்டுப் பொருட்களைத் தாங்கள் பங்கிட்டுக்கொண்டார்கள். இதைக் கேள்வியுற்றதும் இன்னும் எத்தனை புயல் வருமோ என்று ஏங்கினேன் நான்.

### செட்டிபாளையத்தில்

மாங்காட்டை அடுத்து அமைந்த செழிப்பான கிராமம் செட்டிபாளையத்துக்கு வருகிறோம் செழிப்பைச் சூருவளியிடம் ஒப்படைத்துவிட்டு சோகத்தாற் போர்த்தியபடி இருந்தது அக்கிராமம். எங்களைக் கூட்டிக் கொண்டுவந்த ஆசிரியரின் கூரை சிதைந்த வீட்டில் 100 க்கும் அதிகமான வீடுகளை இழந்தோர் தஞ்சம் புகுந்து ஒரு விளக்கில் உடலைக் காய்ச்சிக் கொண்டிருந்தனர். மற்றுமொரு ஆசிரியரின் அழிந்த இல்லத்திலும் இதே நிலை இங்கு இறந்துவிட்டான் என்று கூறிக்கொண்டே ஒரு 'வயதான கட்டை'க்கு நெருப்புக் கொளுத்திச் சூடேற்றிக் கொண்டிருந்தார்கள்.

### எனது பாடசாலை

### மாணவிகள் இருவர் பலி!

அடுத்து நான் போதிக்கும் பாடசாலை. அதன் 8 கட்டிடங்களும் தரைமட்டமாகிக் கிடந்தன. அதற்குச் சமீபத்தில் இபாடசாலையில் பயின்ற ஆரும் வகுப்பு மாணவி சுவர் விழுந்து பரிதாபமாக மரணமானர் என எல்லோரும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவ்விடம் செல்ல ஒரே பயம், மாணவியைப் பார்க்கும் மனத் தைரியம் இல்லை, முன்னேறுகிறேன்- மற்றுமொரு மாணவியும விழுந்து மரணமாகியுள்ளார் என அவலக்குரல்வரும் திசையைக் காட்டுகிறார்கள் சிலர். அவ்விடத்தில் சடலத்தை மீட்க ஒரே சனக்கூட்டம் அந்தப்பக்கம் மீண்டும் திரும்பநினைக்கவே உடல்நடுங்குகிறது மாணவியின் தலை மட்டும்தான் தெரிகிறது என்கின்றனர் சிலர். தெரியும் தலை அசைகிறது என்கின்றனர் சிலர் இந்தக் கண்ணராவியை நினைத்துப்பார்க்கவும் முடியவில்லையே அறிமுகமான இந்த முகங்களை இப்படிக் கோரமாகப் பார்க்கமுடியுமா? இன்னும் இ படிச்சலர் மண்ணுள் புதையுண்டு இக்கிராமததில் மாண்டுள்ளனர்; மீட்கிறார்கள் என்கின்றனர் காது வாங்கிக் கொள்கிறது மனம அந்த இரு பழக்கமான மாணவிகளின் முகங்களையே வட்டமிட்டுக் துலங்குகிறது.

### மக்களைப்போலவே விநாயகரும்...

சற்று முன் அடியெடுத்து வைக்கிறேன். வழமையாகத் தினமும் போகும்போதும் வரும்போதும் வணங்கும் விநாயகட்பெருமான் அந்தக் கிராமத்து மக்களைப் போன்றே தன் இருப்பிடம் இழந்து மூலஸ்தானத்துக்குள் ஒதுங்கியிருந்தார். கையெடுத்துக் கும்பிட நடுங்குகிறது. ஒரு பக்கம் மரண ஒலி, அடுத்து எல்லாம் இழந்து வீதிகளை வீடுகளாகக்கொண்ட ஜீவன்களின் ஜீவமரண ஒலி!

பிள்ளையார்தான் செட்டிபாளையத்தின் எல்லை வாசி அடுத்து குருக்கள்மடம் கிராமத்தையே மதிக்கமுடியவில்லை. மரம் என்ற நாமமே இல்லை. குருக்கள்மட கிராமத்தின் பாடசாலை இருந்த இடம் தெரியவில்லை. அந்த அறைக்கு இடிபாடு அதை அடுத்து கிழக்கின் தமிழ்ப்பழம் காலஞ்சென்ற புலவ மணியின் இல்லம் தமிழ்ச்சோலையாகமட்டுமன்றி பசும் சோலையாக இருந்த அவர் இல்லம் பாலையாகக் காட்சியளித்தது இதையடுத்து எனது இருப்பிடம செல்கிறேன். அங்கும் அழிவுக்குக் குறைவில்லை, உயிர்களுக்கு எந்தவிதஆபத்துமில்லையென்றிருந்ததும் நிம்மதி. என்னறைக்கு விரைந்து திறந்து பார்த்தேன். ஒரு பெரிய தென்னை அதன்மேல் விழுந்து நாசப்படுத்தியிருந்தது. பொருட்கள் யாவும் அலுமாரிக்குள இருந்ததால் தப்பின. ஆனல் அன்றிரவு அந்த அறையில் நான் தங்கி இருந்தால்... நினைத்துப் பார்க்கையில் பயமாகத் தான் இருக்கிறது. வரப்போகும் ஆபத்தை உணர்ந்துதான் இறைவன்தன் இருப்பிடத்தில் தஞ்சம் அளித்தானே என எண்ணி நான் இறைவனுக்கு அவ்வேலையில் என் நன்றியைச் செலுத்தினேன்.

### இரு தினங்களின் பின் கண்டதும் கேட்டதும்

அடுத்த இரு தினங்களுக்குப் பின் குருக்கள்மடத்திலிருந்து மட்டக்களப்புக்குப் போகும்போது இடையிலுள்ள கிராமங்களில் கண்ட காட்சிகளும், கேட்ட செய்திகளும் மெய்சிலிர்க்கவைக்கும்.

ஆரப்பத்தைக் கிராமம் காத்தான்குடிக்குப் பக்கத்தில் உள்ளது. பஸ்ஸில் இருந்து பார்க்கும்போது அதன் அழிபாடுகள கண்ணை மூடவைக்கும். அத்தனை பரிதாபமானவை. அக்கிராமத்தில் ஓர் இடத்தை ஒருவர் சுட்டிக்காட்டி 'அந்தா விழுந்திருக்கும் மரக்கிளையின் உச்சியிலே தான் 2 மாதக் குழந்தை ஒன்றைச் சூருவளி தூக்கிக்கொண்டுபோய் வைத்தது. இதைப் பார்த்த தாய் அப்படியே விழுந்து சூருவளிக்குப் பலியானள்' என்று உருக்கமாக அந்தக் கண்ணீர்க்கதையைக் கூறிமுடித்தார்.

### தலை இருக்க உடலைத் தேடுகிறார்களாம்

அடுத்துக் காத்தான்குடி

(5-ம பக்கம் பார்க்க)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி ஆர்-ஜெயலலிதா
தாய்க்கு தலைமகன்

## பாடசாலை தரம் உயரும்?

[நெல்லியடி]

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கனகபுரம் கனிஷ்ட வித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக்க ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி ஆரம்பமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம் சிரமதானமூலம் துப்புரவு செய்துள்ளது.

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30. 7-00 & 9-30 p.m.
ROD STEIGER
ON FRIDAY AT 11.
(adults)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ
[யாழ். நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தெய்வமகன்

3-வது வாரம்!
ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு
நடித்த
(இரு வேடங்களில்)
(புத்தம் புதிய பிரதி)
சபாஷ் மீனா

ராணி
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்- - ராதா சலூஜா
நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

சாந்தி
(யாழ்நகர்)
போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
4 வது வாரம் வசூல்
யாழ். நகரில் ஆங்கிலப்பட வரலாற்றில் வசூலில் சாதனை புரியும் ஒரே படம்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

இன்று மட்டும்
ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - எஸ். எஸ். ஆர்.
கிரிஜா - ரி. ஆர். ராஜகுமாரி - கண்ணம்பா
நடித்த
மனோகரா (புதிய பிரதி)
19-12-78 முதல் பார்த்திபன் கனவு

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
விஷ்ணுவர்த்தன்-சந்திரகலா
நடித்த
அலைகள்
வின்ஸர், றீகல் இரு திரைகளிலும்
22-12-78 முதல்
பைலட் பிரேம்நாத்

## ஜெர்மன், பிரெஞ்சு வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஜேர்மன், பிரெஞ்சு ஆகியவற்றுக்கான வகுப்புகள் அடுத்த வருடம் ஜனவரி மாத நடுப்பகுதியில் வை. எம். சி. ஏ. தாபனத்தில் ஆரம்பமாகும். இவற்றை யாழ் வை. எம். சி. ஏ. தாபனத்தாரே ஒழுங்கு செய்துள்ளனர். (சு.)

## இன்றைய இராசிப்பலன்

மார். மாதம் 3-ந் திகதி
திங்கட்கிழமை
(18-12-78)

**மேடம்:-** முயற்சியால் முன்னேற்றமுண்டு, பாராட்டுதலுக்கும் இடமுண்டு, கடமையில் புதிய ஆர்வம் கிடைக்கும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

**இடபம்:-** வரவில் உயர்வு தென்படும், பெரியோர்களின் ஆதரவுக்கும் இடமுண்டு, பொதுவாக கலைஞர்களுக்கு சிறப்பான தினம், புதினத்திற்கும் இடமுண்டு.

**மிதுனம்:-** வியாபாரத் துறையில் மந்தநிலை காணப்படும், எதிலும் தடுமாற்ற நிலை ஏற்படும், எதிர்பாராத பொருள் விரயத்திற்கும் இடமுண்டு.

**கடகம்:-** இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம், வணிகத்துறையில் சமவருவாய்க்கிடமுண்டு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.

**சிங்கம்:-** பேச்சுவன்மையால் பெருமைக்கிடமுண்டு, இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர், நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாவதற்கிடமுண்டு.

**கன்னி:-** எதிர்பார்த்த விடயம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு.

**துலாம்:-** அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், பொருள்வரவுக்கும் இடமுண்டு, சிறப்பான தினம்.

**விருச்சிகம்-** மக்களால் மகிழ்ச்சி, புதுமையில் நாட்டம் பிறக்கும், குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும், இன்று பொன்னாள்.

**தனுசு:-** முன்னேற்றம் தடைப்படும், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும், உடல் நலத்தைப் பேணி நடக்கவும்.

**மகரம்:-** குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும், காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான தினம், களஸ்திர வழியாலும் நன்மைகளுக்கிடமுண்டு.

**கும்பம்:-** தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்துக்கு இடமுண்டு, புதிய முதலீடுகளை பின்போடவும், உடல்நலத்தைப் பேணி நடக்கவும்.

**மீனம்:-** நீண்டநாள் பிரச்சினையில் சமரச முடிவு காணப்படும், தனவரவுக்கும் இடமுண்டு, பிதாவழி ஆதரவும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Rio (Jaffna)
Daily 4 Shows
NEW ADVENTURE

# மீன்பிடித்தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி அமைச்சு, மீன்பிடி உபகரணங்களை வழங்கி மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் இம் மாவட்ட மீனவர்களுக்கு வங்கிக்கடன் உதவியுடன் பிளாஸ்டிக் வள்ளங்களும், மர வள்ளங்களும், வள்ள இயந்திரங்களும், மீன்பிடி வலைகளும் முப்பத்தைந்து வீதக்கழிவுடன் வழங்கப்படவுள்ளன.

சுகாதாரப் பணியாற்ற

## 32 மருத்துவ மாதர்குழு மட்டுநகர் சென்றது

(பண்டத்தரிப்பு)

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பின் சுகாதாரம் சம்பந்தமான நிவாரணப் பணிகளில் ஈடுபடும் பொருட்டு யாழ். மாவட்டத்திலிருந்து 32 பயிற்சி பெற்ற மருத்துவ மாதர்களைக்கொண்ட குழுவொன்றை சுகாதாரத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது.

ஏழு பொது சுகாதாரப் பரிசோதகர்களைக்கொண்ட மற்றொரு கோஷ்டியும் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் பொருட்டு அங்கு சென்றுள்ளது. (அ)

## சுரங்கப் பாதையில் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்தில் உள்ள ரயில் பாதையைக் கடக்கும் சுரங்கப் பாதையில் மழை வெள்ளம் நிரம்பியிருப்பதனால் பாதையைக் கடக்கும் பிரயாணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

மழை ஓய்ந்து 3 நாட்கள் கடந்தும் சுரங்கப்பாதையில் வெள்ளம் அப்புறப்படுத்தப்படவில்லை. (இ)

## வட்டு. எம். பி. ஆட்சேபம்

(சங்கானை-பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் இயங்கிவந்த ஒரேஒரு மக்கள் வங்கியை சுன்னாகத்திற்கு இடமாற்றம் செய்ததை அடுத்து சங்கானை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், வட்டுக்கோட்டை, மாதகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த பொது மக்கள் மிகுந்த சிரமம் அடைந்துள்ளனர். இங்குள்ள கூட்டுறவுச்சங்கங்கள் வர்த்தகஸ்தாபனங்கள் யாவும் இந்த வங்கி இடமாற்றத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

சங்கானை பொலிஸ்நிலையத்திலிருந்து 75 யார் தூரத்திலுள்ள இவ்வங்கியை பாதுகாப்புக்கருதி சுமார் 10 மைல் தூரத்திலுள்ள சுன்னாகத்திற்கு இடமாற்றம் செய்திருப்பதினால் இப்பகுதிமக்கள தங்கள வங்கி அலுவல்களைக் கவனிப்பதில் மிகுந்த சிரமமடைந்து வருவதையிட்டு வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பி. திரு தா. திருநாவுக்கரசு வங்கி மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். (அ)

## கிழக்கின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் தெரிந்த ஒரு நர்ஸ். அவரின் தலைமட்டும் இருக்கிறதாம். உடலைத் தேடுகிறார்கள் என்று அறிந்த ஒருவர், ஆஸ்பத்திரியின் தரைமட்ட நிலையைச் சுட்டிக் காட்டினார். பாவம், தினமும் கண்முன் காணும் அந்த நர்ஸின் தலையை மட்டும் ஏன் இந்தச் சூறாவளி விட்டுவைத்ததோ; அதையும் கொண்டு போயிருக்கலாமே என்று எண்ணத் தோன்றியது.

இப்படியே கிழக்கின் ஒவ்வொரு கிராமங்கள், நகரங்களிலும் அழிபாடுகள் மட்டுமல்ல, உயிரிழப்புக்களின் நெஞ்சை உருக்கும் கண்ணீர்க் கதைகள் பல. மீண்டும் இக்கதைகள், தொடர் கதைகள் ஆகாமல் இறைவனை வேண்டி யாவரும் நாம் பிரார்த்திக்க வேண்டுமேயன்றி அவை பற்றிக் கூறிக்கொண்டிருப்பதால் இடைப்பது என்ன? (அ)

## கிறிஸ் குத்து

(பண்டத்தரிப்பு)

வயிற்றில் கிறிஸ் கத்தியினால் குத்தப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் சுன்னாகத்தைச் சேர்ந்த தணிகாசலம் என்ற 34 வயதான ஒருவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பழைய தகராறே இச்சம்பவத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இச்சம்பவம் சம்பந்தமாக பரமேஸ்வரன் என்ற வாலிபரை சுன்னாகம் பொலிசார் தேடி வருகின்றனர். (அ)

...

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றவர் அக்கிணற்றில் விழுந்து இறந்த பரிதாபமான சம்பவம் ஒன்று புத்தூர்ப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த எஸ். மாணிக்கம் (வயது 35) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் தொடர்பான மரண விசாரணையை யாழ்ப்பாணத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அமிர்தலிங்கம் நடாத்தி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இது பற்றிய விசாரணைகளைக் கோப்பாய்ப் பொலிஸார் நடாத்தினர். விசாரணையின்போது சாட்சியங்களைப் பொலிஸ் கான்ஸ்டபிள் தயாவன்ஸ கொலம்பகே பதிவு செய்தார். (கா)

...

சூறாவளிக்கு

## 2,000 பேர் பலி; 57,000 பேர் வீடிழப்பு

(மட்டக்களப்பு)

சூறாவளியினால் 2,000 பேர் உயிர் இழந்துள்ளார்கள். 57,000 பேர் வீடுகளை இழந்துள்ளார்கள். கிழக்குப் பிராந்தியக் கல்வித் திணைக்களத்திற்கு ரூபா 21லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெற்ற நிவாரணப் பணிக்குழுவின் மகாநாட்டின்போது கிழக்குப் பிராந்திய கல்வி அதிபதி திரு. ச. ஜே. சற்குணராசா கூறியுள்ளார்.

இம்மகாநாட்டுக்கு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் தலைமைதாங்கினார். (அ)

# எம். ஜி. ஆர். சென்ற விமானம் விபத்துக்குள்ளானது!

## தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

(ஹைதராபாத்)

சென்னையிலிருந்து புதுடில்லி சென்ற இந்திய ஏயர் லைன்ஸ் 'போயிங்' விமானம் நேற்று விபத்துக்குள்ளானதில், தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மற்றும் இரண்டு அமைச்சர்கள் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தனர்.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்த ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு சென்னா ரெட்டியும் 109 பிரயாணிகளும் மயிரிழையில் பிழைத்தனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளாகி தரையிறங்கியபோது ஏற்பட்ட விபத்தில் ஒரு பெண் உட்பட இரண்டு சிறுவர்கள் பலியானார்கள்,

### எம். ஜி. ஆர். பயணம்

இந்தியன் ஏயர் லைன்ஸ் போயிங் விமானம் நேற்று சென்னையிலிருந்து புதுடில்லி நோக்கிப் புறப்பட்டதும், விமானத்தில் ஏற்பட்ட சிறு கோளாறு காரணமாக மீண்டும் சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் இறக்கப்பட்டது. இந்த விமானத்தில் தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் மற்றும் மின்சார, வாணிபம், ஹரிஜனர் நலன் அமைச்சர்களும் பிரயாணம் செய்தார்கள்.

ஆனாலும் புறப்பட்ட விமானம் கோளாறு காரணமாக மீண்டும் சென்னை திரும்பியதும் தமிழக முதலமைச்சர் தமது புதுடில்லி விஜயத்தை ரத்துச் செய்தார் திரு எம் ஜி ஆரின் இத்திடீர்முடிவைத் தொடர்ந்து மற்றைய இரண்டு அமைச்சர்களும் தங்களின் பிரயாணத்தை ரத்துச் செய்தனர். இந்த விமானம் மீண்டும் புறப்பட்டபோது, தமிழக முதலமைச்சரோ அமைச்சர்களோ இருக்கவில்லை.

### ஹைதராபாத் சென்றதும்

இந்த விமானம் சென்னையிலிருந்து புறப்பட்டு, ஹைதராபாத்தில் தரித்துநின்று புதுடில்லி நோக்கி புறப்பட்ட சில நிமிடங்களில் தீப்பிடித்துக் கொண்டது! விமான ஓட்டிகளின் சாதுரியத்தினால் விமானம் பத்திரமாக மீண்டும் ஹைதராபாத் விமானநிலையத்தில் இறக்கப்பட்டது, விமானத்தில் பிரயாணம் செய்த ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் உட்பட 109 பிரயாணிகளும் எவ்வித காயமுமின்றி உயிர்பிழைத்தனர் இரண்டு பிரயாணிகள் எரிகாயங்களுக்குள்ளானார்கள் இவர்களை தவிர 15 பிரயாணிகள் சிறுகாயமடைந்தனர்.

இந்த விமானம் தரையிறக்கப்பட்டபோது நிலத்தில் புல்வெட்டிக்கொண்டிருந்த ஒரு பெண் உட்பட இரண்டு சிறுவர்கள் பலியானார்கள்.

### புதுடில்லி மாநாடு

புதுடில்லியில் நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டே தமிழக முதல்வரும், ஆந்திரா முதல்வரும் இந்த விமானத்தில் பிரயாணம் செய்தார்கள்.

---

## 'பஸ் சேவை பாதிப்பில்லை'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் —கண்டிவீதி செம்மணி நாவற்குளிப் பாலத்தின் ஒருசிறு பகுதி உடைந்திருந்தபோதிலும் இதனால் பஸ் போக்குவரத்து எதுவும் பாதிக்கப்படவில்லை என்று பஸ் நிலைய வேலைப்பகுதி வேலை மேற்பார்வையாளர் திரு. செ. குமாரசுவாமி அறிவிக்கிறார்.

'இப்பாலம் உடைந்த நிலையில் காணப்படுவதால் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா கடுகதி பஸ்கள் கோப்பாய்ச் சந்தி வரை சென்று பின்னர் கைதடிச்சந்தி சென்றே பிரயாணத்தைத் தொடர்கின்றன என 15-12-78 வெள்ளிக்கிழமை 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தியை மறுத்து இவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

---

சங்கானை 1

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர், மானிப்பாயில் கோயில் கிணற்றில் பிணமாகக்கிடந்தார். இவரின் பிரேதபரிசோதனை பிட்பிலி சுடலை மைதானத்தில் நடைபெற்றது.

கந்தையா சாமுவேல் துரையப்பா [வயது 72] என்பவரே இப்படி மரணமானவராவார்.

மானிப்பாய் யாழ் அரிசி ஆலையில் கடமையாற்றி வந்த இவர் சம்பவதினத்திற்கு முதல் நாள் பருத்தித்துறையிலிருக்கும் தனது வீட்டிற்குச் செல்வதாக கூறி ஆலையை விட்டு வெளியேறிச்சென்றாராம். மறுதினம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கிணற்றில் பிணமாகக் காணப்பட்டார்.

இறந்தவரின் மருமகன் இராசையா பரமசகாயம் சாட்சியமளிக்கையில், தான் இறந்தவரின் மகளை மணம்முடித்ததாகவும் இறந்தவர் யாழ் அரிசி ஆலையில் வேலைசெய்துவந்ததாகவும் இவர் கிணற்றில் வீழ்ந்து இறந்த செய்தி தனக்குக் கிடைத்ததும் தான் இங்குவந்ததாகவும் என்ன காரணத்தினால் இச்சம்பவம் நிகழ்ந்தது என தனக்குக்கூற இயலாதெனவும் சொன்னார்.

---

## தொகுதி தோறும் தையல் பாடசாலை

### அமைச்சர் விமலா தகவல்

(கொழும்பு)

168 தொகுதிகளிலும் 168 பெண்கள் தையல் பாடசாலைகள் நிறுவப்படும்.

இத்தகவலை கிராம அபிவிருத்தியமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கிராமாபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உதவியாளர் ஒருவர் பிரதிரையில் நியமிக்கப்படுவார்என்றும் திருமதி கன்னங்கரா தெரிவித்தார். (ம-இ)

---

31-12-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது

'ஈழநாடு' ஆதரவுடன்

றோட்டரி ஆரம்பித்த .

### சூறுவளி, வெள்ள நிவாரணநிதி

(15-12-78) இதுவரை கிடைத்த தொகை: ரூபா 9115-00

S. சிவசுப்பிரமணியம் சட்டத்தரணி கொழும்பு-12. ரூபா 10-00

இந்நிதிக்குப் பணம் அனுப்பவேண்டிய முகவரி:

றோட்டரிச் சங்கம், யாழ்ப்பாணம்,
மே - பா. ஈழநாடு லிமிட்,
தபாற்பெட்டி எண்: 49.
யாழ்ப்பாணம்.

---

மட்டக்களப்பில்

## கூட்டுறவு சங்கம்மூலம் உணவு விநியோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அகதிகளின் உணவு விநியோகம் சீர்குலையாமலிருப்பதற்காக, கடந்த திங்கட்கிழமை முதல் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் பொறுப்பில் கிராம சேவை அலுவலர்களினால் கிராம முன்னேற்ற சங்கங்களினாலும் ஏனைய தொண்டர் நிறுவனங்களினாலும் கடந்த வாரம் நடைபெற்ற உணவு விநியோகம் இப்பொழுது கூட்டுறவு சங்கங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கன்னன்குடா, ஈச்சந்தீவு ப. நோ. கூ. சங்கம் தனியார் கட்டிடங்களில் வைத்து உணவு விநியோகத்தை மேற் கொண்டுள்ளது.

மேற்படி சங்கம் விவசாயிகளுக்கான யூறியா உரப்பசளை விநியோகத்திலும் ஈடுபட்டுள்ளது.

---

காரை. ப. நோ. கூ. சங்கத்தில்பெற்ற

## கடன்கட்டாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தில் கடந்த நிர்வாகத்தின் போது கடனாக வழங்கப்பட்ட மூன்று லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையினை அறவிடுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் சங்கத்தின் புதிய இயக்குநர்சபை மேற்கொண்டுள்ளது.

கடன்களை மீளச் செலுத்தாத அங்கத்தவரல்லாத பதினாறு பேர்களுக்கு யாழ்ப்பாணம், மல்லாகம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சங்கத்தின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி அ. மரியாம்பிள்ளையினால் இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. கடன்களை மீளச் செலுத்தாத சங்கத்தின் அங்கத்தவர்களமீது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்சக்குழுவின் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (அ)

---

## கலைஞர்களுக்கு அடுத்தாண்டில்சேமலாபநிதி

### கலாச்சார அமைச்சர் உறுதி

(கொழும்பு)

காலஞ்சென்ற பாடகி திருமதி ருக்மணிதேவியின் குடும்பத்திற்கு சேமலாபநிதி வழங்கியதுபோல் மற்றும் கலைஞர்களுக்கும் அரசு நிதி வழங்கவேண்டும் என்று நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் கேட்டார்.

அண்மையில் காலஞ்சென்ற தலைசிறந்த நாதஸ்வர வித்துவான் திரு எம் எஸ் ராஜதுரையின் குடும்பம் தற்போது மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளது. அக்குடும்பத்தினருக்கும் சேமலாபநிதி வழங்கப்படவேண்டும் என்று திரு சிவசிதம்பரம் கேட்டுக் கொண்டார்"

இதற்குப் பதிலளித்த கலாச்சார அமைச்சர் திரு ஈ எல் பி ஹுருள்ளே, அடுத்த ஆண்டு 'கலைஞர்கள் சேமலாபநிதி' அரம்பிக்கப்பட உள்ளது, அதிலிருந்து திரு இராஜதுரையைப் போன்ற கலைஞர்களுக்கு நிதிஉதவி வழங்கப்படும் என உறுதி அளித்தார். [ம-இ]

---

## சில இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் இதுபற்றி எவ்வித சம்பவமும் நிகழாதவாறு நகரில் பல இடங்களுக்கும் சென்று பார்த்துக் கொண்டனர்,

சாவகச்சேரி பிரதிநிதி திரு வி. என் நவரத்தினமும் இதுபற்றி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டதுடன் இன்று நேரில் சந்தித்துப் பேசவிருக்கிறார்,

வசாவிளான் சந்திச் சம்பவம் பற்றிய நிலைமையை நேரில் எடுத்துக் கூறும் பொருட்டு கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை நேற்று காலை கொழும்புக்குப் பயணமானார்.

---

## மரண அறிவித்தல்

### கே. வி. தம்பிப்பிள்ளை

காலஞ் சென்ற தங்கம்மாவின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, இரத்தினம், மயில்வாகனம், (இ. போ ச) ஆகியோரின் தந்தையுமான கே. வி தம்பி பிள்ளை காலமானார். அன்னாரின் பூதவுடல் ஒட்டுமடம் சந்தியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் மூன்று மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். தகவல் ஈசா கபே (ஒட்டுமடம்) கே. நாகராஜா. 1101

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegrams Eelanaadu Telephone: 589, Registered as a Newspaper in Sri Lanka.